<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 87/2022 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | மஞ்சுநாத் | | | |
| **Date** | **:** | **12.11.2024** | | | |
| **Time** | **:** | **3.35 p.m to 4.1p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு.மஞ்சுநாத் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

தொ.சா.ஆ.4 குற்றச்சாட்டு குறிப்பாணையில் கே.பி.எம்.ஜி நிறுவனத்தின் ஆய்வு அறிக்கையின் நகல் இணைக்கப்பட்டதாக சொல்லப்பட்டது எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.1 ஆகும். 26.12.2020 தேதியிட்ட விளக்ககடித்தத்தை நான் கொடுத்தேன் என்றால் ஆமாம் பின்னர் நிர்வாகமானது என்னை விசாரணை நிலுவையில் இருந்தபோது தற்காலிக பணியிடை நீக்கம் செய்தார்கள் என்றால் ஆமாம். அந்தப் பணியிடை நீக்க உத்தரவு தான் என்னிடம் காட்டப்படுவதா என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.2. 30.12.2020 அன்று நிர்வாகம் எனக்கு கே.பி.எம்.ஜி ஆய்வு அறிக்கை நகலை தமிழாக்கம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம். 30.12.2020 கடிதம் நி.சா.ஆ.3. ஆய்வறிக்கையின் தமிழாக்க நகல் நி.சா.ஆ.4. எனக்கு எதிராக உள்துறை விசாரணை நடைபெற்ற அதில் நான் முழுமையாக கலந்து கொண்டேன் என்றால் ஆமாம். எனக்கு உதவி செய்ய சக தொழிலாளியாக யார் கலந்து கொண்டார்கள் என்றால் யாரையும் நான் வைத்துக் கொள்ளவில்லை. உள்துறை விசாரணை முடிவுற்று அந்த விசாரணையில் நான் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு அது சம்பந்தமான

என்னுடைய விளக்கத்தை கேட்டு நிர்வாகம் கடிதம் அனுப்பியது என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூல சாட்சியம் பத்தி 4,6,7 ல் சொல்லி உள்ளவை முதல் நிலை விசாரணைக்கு தேவையற்றது என்றால் இல்லை. நான் உள்துறை விசாரணையின் போது நிர்வாக தரப்பில் ஆவணங்கள் சாட்சிகள் மூலமாக பதிவு செய்யப்படாமல் நிர்வாக பிரதிநிதி மூலம் குறியீடு செய்யப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் வாய்மொழி ஆட்சேபணை தெரிவித்தேன் எழுத்து மூலமாக தெரிவிக்கவில்லை. 04.02.2021 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தான் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றாலும் அன்றைய தின விசாரணையில் நான் கலந்து கொண்டு அவை குறியீடு செய்யப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்காமல் பெற்று இருக்கிறேன் என்றாலும் அன்றைய தினம் என்னிடம் ஆவணங்கள் மட்டும் ஒப்படைக்கப்பட்டு கையெழுத்து பெறப்பட்டு அடுத்த தேதியில் விசாரணை நடைபெறும் என்று சொல்லி அனுப்பினார்கள். சக தொழிலாளியை அழைத்து வரச் சொல்லி என்னிடம் விசாரணை அதிகாரி சொல்லி இருந்தார் என்றால் ஆமாம். 12.02.2021 அடுத்த விசாரணை நடைபெற்றது என்றால் ஆமாம். அன்றைய தினமும் நான் சக தொழிலாளியை என்னுடன் அழைத்து வரவில்லை என்றால் ஆமாம். அது சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னிடம் கேட்டபோது நான் சக தொழிலாளியை அழைத்து வருவது சம்பந்தமாக அடுத்த விசாரணை தேதி அன்று முடிவு செய்து கொள்வதாக சொன்னேன் என்றால் ஆமாம். நிர்வாக தரப்பு சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு நான் அவர்களை முழுமையாக குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் இல்லை. குறுக்கு விசாரணையை நான் முடிப்பதற்குள்ளாகவே விசாரணை அதிகாரி தன்னிச்சையாக அதனை முடித்துக் கொண்டு விட்டார். நான் சொல்வது போன்று குறுக்கு விசாரணை, விசாரணை அதிகாரியால் தன்னிச்சையாக முடித்துக் கொள்ளப்பட்டதாக அறிக்கையில் காணப்படவில்லை என்றாலும் மேற்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எதிரான உள்துறை

விசாரணையானது எனக்கு முழுமையான வாய்ப்பு அளிக்கப்பட்டு இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டுதான் நடத்தப்பட்டது என்றாலும் நான் பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:12.11.2024